தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.73/மா/2022**

**நாள். 27.07.2022**

திரு. A. பாலசுப்பிரமணியன்,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை, சின்ன சொக்கிகுளம், லஜபதிராய் சாலை, முதல் தளம் கதவு எண்.18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. பாலசுப்பிரமணியன் என்பவரின் 12.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2022 அன்று பெறப்பட்டு 73/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, சின்ன சொக்கிகுளம், லஜபதிராய் சாலை, முதல் தளம் கதவு எண்.18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. பாலசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 12.05.2022 நாளிட்ட தனது மனுவில்,

" மதுரை மாநகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரியும் திரு.முபாரக் என்பவர் வரி விதிப்பில் செய்து வரும் முறைகேடுகள் குறித்தும் கையூட்டு பெறாமல் எந்த வரிவிதிப்பையும் செய்வதில்லை என உரிய ஆதாரங்களுடன் தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அவர்களுக்கு புகார் செய்திருந்தேன்.மேற்படி புகாரினை ஓம்பட்ஸ்மேன் தான் விசாரிக்க முடியும் எனத் தெரிவித்து எனது புகாரினை எனக்கே திருப்பி அனுப்பி வைத்து விட்டார். திரு.முபாரக் என்னிடம் கணக்கீட்டு படிவத்தில் உயரதிகாரிகள் கையொப்பம் இடாததால் கம்ப்யூட்டர் பிரிவில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி குறைந்த வரியை நிர்ணயம் செய்து தருவதாகக் கூறி கடந்த 03.04.2018ம் நாள் எனது வீட்டிற்கு வந்து ரூ.25,000/– கையூட்டு தரும்படி கேட்டார். நான் கையூட்டு தருவதற்கு சம்மதிக்காததால் ஏற்கனவே பல மடங்கு உயர்த்தப்பட்ட வரியை உறுதி செய்து விட்டார். கையூட்டு பெற்றுக்கொண்டு அவர் வரிவிதிப்பில் முறைகேடுகள்

செய்து வருவதை உரிய ஆதாரங்களை மாநகராட்சி அலுவலகத்திலிருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று ஊழல் தடுப்பு இயக்குனருக்குப் புகார் செய்தேன். மேற்படி புகார் எனக்கே திரும்ப வந்துவிட்டபடியால் அந்த புகாரினை உரிய இணைப்புகளுடன் தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். இத்துடன் உரிய புகார் படிவத்தையும் இணைத்து சமர்ப்பித்துள்ளேன். கட்டணத்திற்கான முத்திரை வில்லையையும் ஒட்டியுள்ளேன். இப்பொருள் தொடர்பாக எந்த ஒரு விரிவான விசாரணைக்கும் தயாராக உள்ளேன். தாங்கள் இப்பொருள் தொடர்பாக விசாரணை நடத்தி மதுரை மாநகராட்சிக்கு ஏற்பட்டு வரும் நிதியிழப்பை சரி செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரையும் 27.06.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 09.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

3) மனுதாரர் 27.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரர் தனக்கு 76 வயது ஆகின்றது என்றும், தான் ஒரு இதய நோயாளி எனவும் மேலும் தான் தீவிர சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தான் கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளதாகவும் தனது 20.6.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4) கண்காணிப்பாளர், மற்றும் இளநிலை உதவியாளர், மதுரை மாநகராட்சி இருவரும் 27.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"மனுதாரர் திரு. பாலசுப்பிரமணியன் என்பவர் வார்டு எண். 42, மதுரை சின்ன சொக்கிகுளம், லஜபதிராய் சாலை எண் 18ல் அமைந்துள்ள தனது வீட்டிற்கான வரி விதிப்பு எண் 24055ல் விதிக்கப்பட்ட சொத்து வரியை திருத்தம் செய்திட மாநகராட்சியை அணுகியபோது மதுரை மாநகராட்சி வருவாய் உதவியாளர் திரு. முபாரக் என்பவர் கையூட்டு கேட்டதாக குற்றம்சாட்டி மனு அளித்திருந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட திரு.முபாரக் என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரி தான் நிர்ணயம் செய்யவில்லை என்றும், இதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் மூலமே சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், வரி விதிக்கும் பொருட்டு அவரது வீடு மற்றும் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள வீடுகளை அளவீடு செய்ய குழு அமைக்கப்பட்டிருந்தது என்றும், ஆனால் தான் அக்குழுவில் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரரின் வீடு 2003ல் கூரை வீடாக இருந்தது. அப்போது அவருக்கு குறைவான வரியே விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் அவரது வீடு 2004ல் மாடி வீடாக கட்டப்பட்டது. எனவே சுமார் 2832 சதுர அடி கொண்ட மாடி வீட்டிற்கு 2014ம் ஆண்டிலிருந்து புதிதாக வரி விதிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள கோகலே சாலையில் எண் 6 மற்றும் 7ல் அமைந்துள்ள வணிக வளாகத்திற்கு சொத்துவரி மாற்றுவது குறித்து மேற்கண்ட இடத்தை அளவீடு செய்து கணினியில் ஏற்றப்பட்டுள்ளது. தற்போது மாநில அளவில் சொத்துவரி சீராய்வு நடைபெறுவதால், அவை முடிந்தவுடன் மேற்கண்ட வணிக வளாகங்களின்

சொத்துவரி மாற்றியமைக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் 22.06.2022 நாளிட்ட கடிதத்தையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர்(பணி)(பொ) தனது 22.06.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" கடந்த 03.10.2018ல் துணை ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்கள் முன்னிலையில் திரு.A. பாலசுப்பிரமணியன் என்பவரால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் திரு.முபாரக் என்பவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் தனது வீட்டிற்கான வரிவிதிப்பு எண்.24055ல் விதிக்கப்பட்ட சொத்து வரியினை திருத்தம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட வரிவிதிப்பு எண்.24055ல் வரி திருத்தம் செய்திட கோரி மனுதாரரின் மகன் திரு.ஆனந்த் என்பவரால் மதுரை மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் O.S.No.258/2019–ன்படி வழக்கு தொடரப்பட்டு நாளது தேதி வரை வழக்கு நிலுவையில் உள்ளது. திரு.A. பாலசுப்பிரமணியன் என்பவரின் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்கண்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள திரு.முபாரக், வருவாய் உதவியாளர் (பொறுப்பு) என்பவர் மீது உரிய விசாரணை அழைப்பாணை அனுப்பப்பட்டு உரிய வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி வாக்குமூலத்தில் மனுதாரரின் வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம், தான் செய்யவில்லை எனவும் இதற்கென நியமனம் செய்யப்பட்ட குழுவின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் திரு.A.பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ள வரிவிதிப்பு எண்–24055ல் சொத்துவரி திருத்தம் செய்வது தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் மேல் நடவடிக்கை தொடர இயலாத நிலை உள்ளது என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது'' என உதவி ஆணையர் தமது 22.06.2022 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மதுரை மாநகராட்சி கண்காணிப்பாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- மனுதாரர் மதுரை மாநகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரியும் திரு.முபாரக் என்பவர் வரி விதிப்பில் செய்து வரும் முறைகேடுகள் குறித்தும் கையூட்டு பெறாமல் எந்த வரிவிதிப்பையும் செய்வதில்லை என உரிய ஆதாரங்களுடன் தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அவர்களுக்கு புகார் செய்துள்ளார். மனுதாரர் மேற்படி புகாரினை இம்முறைமன்ற நடுவம்தான் விசாரிக்க இயலும் என குறிப்பிட்டு தனக்கே அனுப்பப்பட்டுள்ளது என குறிப்பிட்டு இப்புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார்.

- மனுதாரர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள் வீடு 2003ல் கூரை வீடாக இருந்துள்ளது. அப்பொழுது அவருக்கு குறைவான வரியே விதிக்கப்பட்டுள்ளது. பின்னர் அந்த வீடு 2004ல் மாடி வீடாக கட்டப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 2832 சதுர அடி கொண்ட மாடி வீட்டிற்கு வெகு தாமதமாக அதாவது 2014ம் ஆண்டிலிருந்து தான் புதிதாக வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதை மாநகராட்சி அலுவலர்கள் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. சரியான முறையில் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தால், 10 வருட காலதாமதமான வரிவிதிப்பை தவிர்த்திருக்கலாம். இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வருவாய் இழப்பிற்கு மாநகராட்சி அலுவலர்களின் மெத்தனப் போக்கே காரணமாகும். இச்செயல் அவர்களின் கடமை தவறிய செயலாகவே இம்முறைமன்றம் கருதுகிறது.

- மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ள கோகலே சாலையில் கதவு எண் 6 மற்றும் 7–ல் அமைந்துள்ள வணிக வளாகத்திற்கு சொத்துவரி மாற்றுவது குறித்த மேற்கண்ட இடத்தை அளவீடு செய்து கணினியில் ஏற்றப்பட்டுள்ளது எனவும் தற்போது மாநில அளவில் சொத்துவரி சீராய்வு நடைபெறுவதால், அவை முடிந்தவுடன் மேற்கண்ட வணிக வளாகங்களின் சொத்துவரி மாற்றியமைக்கப்படும் என மாநகராட்சி அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் தொடர்பாக, மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு செய்ததற்கு தனது 09.05.2018ம் நாளிட்ட கடிதத்தில் பதிலளித்துள்ள பொது தகவல் அலுவலர் கதவு எண் 6க்கு வணிக அடிப்படையில் வரி விதிக்கப்பட்டுள்ளது எனவும், கதவு எண் 7க்கு குடியிருப்பு அடிப்படையில் வரி விதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இதிலிருந்து வணிக வளாக கட்டிடத்திற்கு குடியிருப்பு பயன்பாட்டு வரி விதிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. இது மதுரை மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையும் கடமை தவறிய செயலையும் காண்பிப்பது மட்டுமல்லாமல் தவறுக்கு உடந்தையாக இருந்ததை கண்கூடாக காணமுடிகிறது.

- 07.04.2022 நாளிட்ட தினமலர் நாளிதழில் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படுவதில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன எனவும் சில கட்டடங்களுக்கு தோராயமாக வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் புதிய சொத்து வரி நிர்ணயம் செய்யும் முன்னர் கட்டடங்களை மறு அளவீடு செய்து சரியான சொத்து வரியை விதிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி அதற்கு சான்றாக தினமலர் செய்தி நறுக்கினையும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் சொத்து வரி நிர்ணய முறைகேடு தொடர்பாக மனுதாரர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் மாநகராட்சியின் பார்வைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஊடகங்களும் இந்த முறைகேடு தொடர்பாக செய்திகள் வெளியிட்டுள்ளன. இவை மாநகராட்சி அலுவலர்களின் கவனத்திற்கு வராமல் இருக்க வாய்ப்பில்லை. எனவே இனி வருங்காலங்களில் சொத்து வரி நிர்ணயம் செய்வதில் உரிய விதிமுறைகளை பின்பற்றி மதுரை மாநகராட்சி நிர்வாகம்

உரியமுறையில் வரி நிர்ணயம் செய்திட மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரரின் வீட்டிற்கு வரிவிதிப்பு செய்ததை மறு ஆய்வு செய்து சட்டவிதிகளின்படி வரி விதிக்கப்பட்டிருந்தால் அதை மனுதாரருக்கு தெரிவிக்குமாறும், மற்றும் மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டிருந்த கட்டிடங்களை அளவீடு செய்து விதிமுறைகளின்படி சரியாக வரி விதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செயது கொள்ளுமாறும் மதுரை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

திரு.முபாரக், வருவாய் உதவியாளர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளில் இதுவரை வரிவிதிப்பு செய்யப்பட்ட அனைத்து கட்டிடங்களையும் குழு ஒன்றினை அமைத்து ஆய்வு செய்து ஒரு மாத காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்க மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும், அவ்வறிக்கையின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் 2003–ல் கட்டிய கூரை வீட்டை மாற்றி மாடி வீடாக கட்டிய 2832 சதுர அடி கொண்ட மாடி வீட்டிற்கு மாநகராட்சியால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து அவ்வாறு ஒப்புதல் பெறப்படவில்லை என்றால் உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு நடவடிக்கையினை மேற்கொள்ளவும், வரி விதிப்பில் மெத்தனப்போக்கை கடைபிடித்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடைமுறையில் உ.ள்ள சட்டவிதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளவும் மதுரை மாநகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

வருவாய் உதவியாளர் திரு.முபாரக் மீது மனுதாரர் கூறும் குற்றச்சாட்டைப் புறம்தள்ளிவிட முடியாது. காரணமின்றி ஒருவர் பெயரைக்குறிப்பிட்டு புகார் கூற மனுதாரருக்கு எதுவும் காரணமில்லை. எனவே மாநகராட்சியின் கூற்று இதைப்பொறுத்தவரையில் நிராகரிக்கப்படுகிறது.

வரி விதிப்புகளில் தெரிந்தே குளறுபடிகள் நடந்துவருவது உள்ளங்கையில் நெல்லிக்கனி போன்று தெரிகிறது. 2004–ல் க.ட்டி முடிக்கப்பட்ட மனுதாரரின் வீட்டிற்கு 2014ம் ஆண்டுதான் புதிதாக வரி விதிக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளாக என்ன நடந்தது ? இதற்குக் காரணமான கள அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிதி இழப்பை இவர்களின் ஊதியத்திலிருந்தோ அல்லது ஓய்வூதியத்திலிருந்தோ (ஓய்வு பெற்றிருந்தால்) பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

கோகலே சாலையில் உள்ள வணிக நிறுவனத்துக்கு ( எண்கள் 6 மற்றும் 7) வரி விதிப்பு கோளாறுக்கு காரணமாயிருந்த அனைத்துப்பகுதி கள அலுவலர்கள் மீதும்

கடுமையாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மதுரை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இச்சொத்து வரி இழப்பை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்ய ஆணையிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.A. பாலசுப்பிரமணியன்,
   எண்.18, முதல் தளம், லஜபதிராய் சாலை,
   சின்ன சொக்கிகுளம்,
   மதுரை – 625 002.

2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028

4. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

27/7/22

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032